மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாவட்டக் கழகம் நடத்துகிற உயர் நிலைப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக் கொப்ப தரவேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதை ஏற்கிற முகத்தான் இருவருக்கும் ஏதாவது சங்கடங்கள் ஏற்படக்கூடாது என்பதற் காக இருதரப்பாரையும் கல்வி ஆலோசகர் சந்தித்து இருவரும் ஒத்துக் கொள்ளக்கூடிய வழி முறைகளை வகுத்து ஏற்பாடு செய்து வருகிறார்கள். விரைவில் அது பூர்த்தியாகிவிடும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தனியார் நடத்தும் ஆலைகளிலும் மற்ற பாக்டரிகளிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேல் வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்கவேண்டு மென்று தொழிற் சட்டங்கள் கூறுகின்றன. அதேபோல் ஆசிரியர் களுக்கும் மற்றும் சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஏதாவது குறிப்பிட்ட வருடத்திற்குள் வேலை செய்தால் அவர்களின் வேலை நிரந்தரமாக்கப்படும் என்பதற்கான ஒரு சட்டம் பிறப்பிப்பதற்கு அரசுக்கு யோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது கூட நிரந்தரம் இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆசிரியர்களை வேலைக்கு நியமிக்கும்போது அந்த ஆசிரியர்களை நிரந்தரமாக நாம் எடுத்துக்கொண்டிருந்தால் உட னடியாக அவர்களுக்கு நிரந்தரமாகிவிடும். டெம்பரரி பேஷிஸில் வேலைக்கு அமர்த்தும்போது கொஞ்சம் காலதாமதமாகிறது. அப்படி காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும்படி அடிக்கடி சர்க்கார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தி வருகிறது.

ஆசிரியர் பயிற்சி

***522 வினா :—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம், அல்லது மேலூரில் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் ; இல்லை.

திரு பெ. மலைச்சாமி : ஆசிரியர் பணிக்கு ஆண்களைவிட பெண் களால்தான் அதிகம் பயன் இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது; இதை வலியுறுத்துகிற அளவில் பெண்களுக்கு இத்தகைய பயிற்சி பள்ளிகளைத் துவக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. இப்போதுள்ள பிரச்னை எல்லாம் பயிற்சி பெற்று வெளியே வந்தவர்களுக்கு பூர்ணமாக வேலை கொடுக்க முடியவில்லை என்ற காரணத்தால் வருடந்தோறும் எவ்வளவு ஆசிரிய ஆசிரியைகள் வேண்டுமென்று கணக்கிட்டு அதற்கேற்றாற்போல் இடங்களை ஒதுக்கி வருகிறோம், கூட்டுகிறோம், அல்லது குறைத்து வருகிறோம்.

ஹாஜி மா. மு. பீர் முஹம்மது : ஆரம்பப் பள்ளி மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர்களை விட ஆசிரியைகள் சிறந்த முறையில் பயிற்றுவிக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் கல்வியாளர்களிடம் இருக்கிற காரணத்தினால் ஆசிரியர் பயிற்சிக்கு அதிகம் மாணவர்களை எடுப்பதைவிட அதிகமான மா ணவிகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆண்களையே அப்படி முற்றிலும் வெறுப்பதற்கு நான் தயாராகயில்லை. ஆண்களிலும் திறமையான வர்கள் இருக்கிறார்கள், பெண்களிலும் திறமையானவர்கள் இருக்கிறார் கள். இரண்டிலும் மோசமானவர்களும் இருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பெண்களுக்கென ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறப்பது ஒருபுறமிருக்க ஏற்கனவே உள்ள சிலயிடங்களில் —திருமங்கலத்தில் 80 ஆக இருந்த இடம் 40 ஆக குறைக்கப்பட்டிருக் கிறதே அதை மீண்டும் 80 ஆக உயர்த்த ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?

1969 மார்ச் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தப் பள்ளிக்கூடத்தைக்கூட பரிசீலித்தேன். நம் தேவைக்கேற்றவாறு எண்ணிக்கையை கூட்டுகிறோம் அல்லது குறைக்கிறோம் என்று முன்னாலே சொன்னேன். எல்லாவற்றையும் கூட்டினால் வேலையில்லாத் திண்டாட்டத்தை அணுகவேண்டிய காரணத்தால், ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு செக்ஷன் கூட்டுவது அல்லது குறைப்பது என்பதுபற்றி அப்போதைக்கப்போது அதிகாரிகள் பரிசீலித்து முடிவு எடுக்கிறார்கள்.

புலவர் க. முருகையன் : இப்போது தேர்வு பெற்றிருக்கிற ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. சர்க்காருடைய பணத்தையும், பொது மக்களின் வரிப் பணத்தையும் செலவு செய்து அவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். ஆகவே, இந்தப் பயிற்சியைக் குறைத்து வேறு பயிற்சிகளுக்கு வகை செய்ய அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ் ஆசிரியர் அப்படிச் சொல்வது என்றால் அதைப் பாராட்டி நாம் அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டியது தான். இருந்தாலும் சில நேரங்களில்—நான் தமிழ் ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்து கொண்டேன். அவர்கள் போட்டிருக்கும் தீர்மானம் தமிழ் ஆசிரியர்களுக்கு வேலை இல்லை, ஆகவே அவர்களை பஞ்சாயத்து யூனியன்களில் நியமிப்பதற்கு முன் உரிமை கொடுக்கவேண்டும் அல்லது கோவில்களில் நிர்வாக அதிகாரிகளாகப் போடவேண்டும் என்று கூட அவர்கள் தீர்மானம் போட்டிருந்தார்கள். ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு எப்படியாவது பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க ஐந்தாண்டுத் திட்டங்களில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை நாம் வருடந்தோறும் பெருக்கி வருகிறோம்.

*** 523. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : மு.ப. 9.30

(அ) ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயிலும் மாணவர்கட்கு அரசினர் வழங்கும் உதவித் தொகை (Stipends)-ஐ அதிகரிக்கும் உத்தேசம் அரசினர்க்கு உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அரசினர் உதவித் தொகை ஏதேனும் அளிக்க முயற்சிப்பார்களா ? குறைந்தபட்சம் ஆதித் திராவிட சமுதாயத்திற்கும், பிற்பட்ட சமுதாயத்திற்கும் உதவித் தொகையை அதிகரிக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. அதிகப்படுத்தப் போகிறார்களா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளைப் பார்க்கும்பொழுது, ஏராளமான மாணவர்கள் முன் வருகிறார்கள். ஆகவே, அதிகப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவரவர்களே, பயிற்சிப் பள்ளிகளில் படிக்கும் ஆண்களைவிட பெண்களுக்கு கைவேலைகள் நிறைய இருக்கின்றன. தையல், நிட்டிங் இருக்கின்றன. அதற்கு வேண்டிய உபகரணங்களை வாங்கவேண்டியிருக்கிறது. அதற்காக பெண்கள் பயிற்சிப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு ஸ்டைஃபண்டை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இல்லை.